**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.856/2022

வா.சா.1-சரவணன்

**குறுக்குவிசாரணை 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்:-**

வா.சா.ஆ.2 கிரைய உடன்படிக்கையில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்திருக்கிறார்கள் என்றால் சதீஷ் என்பவர் சாட்சி கையெழுத்து செய்திருக்கிறார் மற்றொரு சாட்சி பெயர் தெரியவில்லை. 06.03.2014 தேதியிட்ட வா.சா.ஆ.2 கிரைய உடன்படிக்கை யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் நான் விஷ்வநாதன் என்பவருக்கு எழுதிக்கொடுத்தேன். சாட்சி மீண்டும் கருப்புசாமிக்கு எழுதிக்கொடுத்ததாக கூறுகிறார். கிரைய உடன்படிக்கை பத்திரம் எழுதி வாங்கியதாக சொல்லப்படும் கருப்புசாமியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கருப்புசாமியை 06.03.2014 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் தரப்பினராக உள்ள கருப்புசாமியை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் பெயரிலுள்ள கிரைய உடன்படிக்கை காலாவதியான பின்பு 1, 2 பிரதிவாதிகள் 3வது பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணத்தினடிப்படையில் கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றும், அதனால் 1, 2 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தேவையான மற்றும் அவசியமான தரப்பினர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 06.03.2014 தேதியிட்ட வா.சா.ஆ.2 கிரைய உடன்படிக்கையில் சாட்சிகள் கையெழுத்து செய்திருப்பதால் 4 முதல் 6 பிரதிவாதிகளான அரசு அலுவலர்கள் இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் அல்ல என்றால் சரியல்ல. 4 முதல் 6 பிரதிவாதிகளுக்குண்டான உயர் அதிகாரிகளை இவ்வழக்கில் அவசியதரப்பினர்களாக நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1, 2

பிரதிவாதிகளிடம் 17.02.2016 அன்று ரூ.3,50,000/- கடன் வாங்கியிருப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**